**தலைப்பு 243 – அபிவிருத்தி நிதி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன அபிவிருத்தி நிதி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 243 - அபிவிருத்தி நிதி திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அபிவிருத்தி நிதி திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமை.<br>2. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலான குறைபாடுகள்<br>3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருந்தமை | 2.5<br>2.6<br>2.7 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முமைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | மனிதவள முகாமைத்துவத்திலான நலிவுகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்துதல்) | முகாமைத்துவ நலிவுகள் | 2.4 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 உத்தேச அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய 37 பணிப்பொறுப்புகளின் கீழான 09 செயற்திட்டங்களுக்காக ரூபா 4,686 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகளின் செயலாற்றல் குறிகாட்டிகள் குறிப்பிடப்பட்டிராமையால் செயலாற்றல் உத்தேசிக்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருந்ததா என்பதை பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### அரசிற்கு சொந்தமான சொத்துக்களை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தாமை

எம்பிலிபிட்டிய தானியக் களஞ்சியம் ரூபா 253.8 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தானியக் களஞ்சியத்தினை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிக்கு முன்னர் திறப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு தெரிவித்திருந்தார்.

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

நிதிப்பிரமாணம் 94 (i) இன் பிரகாரம், சேமிப்பினை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட கூடாத போதிலும், செலவின விடயங்களுக்காக சேமிப்பினை விஞ்சி ரூபா 18,091 மில்லியன் கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.4 முகாமைத்துவ நலிவுகள்

சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி உதவு தொகைகளை மீள்நிரப்பும் உத்தேச முறைமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டி சலுகைகளை மீள்நிரப்புவதற்காக 240-02-02 குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடு நிகழ்ச்சித்திட்டம் (குறைநிரப்பு மதிப்பீடு) மூலம் ரூபா 10,027.066 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 8,000 மில்லியன் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான, குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 255.5 மில்லியன் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ள போதிலும், அத்திகதியில் உள்ளபடியாக நிலுவையாகவிருந்த ரூபா 19,618.65 மில்லியன் தொகையில் ஒரு பகுதியை தீர்ப்பதற்காக அந்த சேமிப்பை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 30,217.766 மில்லியன் அட்டுறுவாக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியான இலங்கை வங்கி பொது திறைசேரிக்கு செலுத்த வேண்டிய இலாபப் பங்கிற்காக எதிரீடு செய்யப்பட்ட ரூபா 840 மில்லியனும் உள்ளடங்கலான ரூபா 10,599.114 மில்லியன் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. அது செலுத்த வேண்டிய மொத்த உதவு தொகையில் 35 சதவீதமான குறைந்த அளவானதாகும்.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய ரூபா 19,618.652 மில்லியன் தொகையான பணத்தில் 2018 யூலை 25 ஆந் திகதி வரையிலும் எவ்வித பணமும் குறித்த வங்கிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மேற்படி தகவல்களுக்கமைய தற்போது பேணிச்செல்லப்படும் கொடுப்பனவு (தீர்ப்பனவு) அளவானது தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுமாயின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 19,618.652 மில்லியனான செலுத்த வேண்டிய வட்டியின் அளவானது 2018 ஆம் ஆண்டின் போது மேலும் அதிகரித்து அரசிற்கு பாரியதொரு பொறுப்பொன்றினை ஏற்படுத்தக்கூடும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 408.02 | 337.41 | 70.62 | 17.3 |
| | மூலதனம் | 2,566.20 | 1,210.57 | 1,355.63 | 52.8 |
| | **மொத்தம்** | **2,974.22** | **1,547.98** | **1,426.25** | **47.9** |
| **2014** | மீண்டுவருபவை | 575.89 | 463.36 | 112.53 | 19.5 |
| | மூலதனம் | 7,388.16 | 6,841.13 | 547.03 | 7.4 |
| | **மொத்தம்** | **7,964.05** | **7,304.49** | **659.56** | **8.3** |
| **2015** | மீண்டுவருபவை | 3,608.66 | 3,586.08 | 22.57 | 0.6 |
| | மூலதனம் | 3,430.79 | 3,254.17 | 176.62 | 5.1 |
| | **மொத்தம்** | **7,039.45** | **6,840.25** | **199.19** | **2.8** |
| **2016** | மீண்டுவருபவை | 7,256.70 | 6,869.85 | 386.85 | 5.3 |
| | மூலதனம் | 2,313.92 | 2,288.38 | 25.53 | 1.1 |
| | **மொத்தம்** | **9,570.62** | **9,158.23** | **412.38** | **4.3** |
| **2017** | மீண்டுவருபவை | 5,608.08 | 4,770.95 | 837.13 | 14.9 |
| | மூலதனம் | 8,449.10 | 8,105.20 | 343.90 | 4.1 |
| | **மொத்தம்** | **14,057.18** | **12,876.15** | **1,181.03** | **8.4** |

மீளாய்வாண்டிற்குரிய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல்**

05 செலவின விடயங்களுக்காக 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டுகளின் மூலம் திணைக்களத்திற்கு குறிப்பானதொரு நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளாது 240-02-02 குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ரூபா 5,042 மில்லியனான குறைநிரப்பு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செலவின விடயங்களுக்கு தேவையான நிதியேற்பாடு 240-02-02 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைநிரப்பு மதிப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்

**(ஆ) ஒதுக்கீட்டு கணக்கு**

**(i) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2 மில்லியன் தொகையான தேறிய நிதியேற்பாட்டில் எதுவித பயன்பாடுமின்றி முழுமையாக எஞ்சியிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

21 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,381.7 மில்லியன் மிகை நிதியேற்பாடுகளில் அந்த செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 709.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டின் 27 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினை கொண்டிருந்தது.

**2.6 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கட்டுநிதிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மீதியொன்று காணப்படவில்லை.

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வாற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிகள் மற்றும் கிடைத்த கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைத்த கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கி டையேயான வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 7,786.16 | 7,786.16 | 110.34 | 7,675.82 |
| பெப்ரவரி | 64.72 | 64.72 | 38.45 | 26.27 |
| மார்ச் | 2,110.95 | 2,110.95 | 566.92 | 1,544.03 |
| ஏப்ரல் | 130.06 | 130.06 | 83.05 | 47.01 |
| மே | 157.76 | 157.76 | 621.74 | (463.98) |
| யூன் | 1,189.64 | 1,189.64 | 525.65 | 663.99 |
| யூலை | 1,941.64 | 1,941.64 | 83.80 | 1,857.84 |
| ஆகஸ்ட் | 2,267.79 | 2,267.79 | 1,032.49 | 1,235.30 |
| செப்தெம்பர் | 2,267.79 | 2,267.79 | 149.80 | 2,117.99 |
| ஒக்தோபர் | 2,342.47 | 2,342.47 | 86.76 | 2,255.70 |
| நவம்பர் | 8,016.47 | 8,016.47 | 66.54 | 7,949.93 |
| திசெம்பர் | 116.36 | 116.36 | 109.25 | 7.11 |
| **மொத்தம்** | **28,391.81** | **28,391.81** | **3,474.79** | **24,917.01** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது விண்ணப்பித்த மொத்த கட்டுநிதி ரூபா 28,392 மில்லியனான போதிலும், கிடைக்கப்பெற்ற கட்டுநிதி ரூபா 3,475 மில்லியன் மாத்திரம் ஆக இருந்தது. அதற்கமைய கிடைக்கப்பெற்ற கட்டுநிதி கோரிய கட்டுநிதியில் 12 சதவீத மாத்திரம் ஆக இருந்தது.

(ஆ) 2018 ஆம் ஆண்டிற்காகவும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வட்டி மானியங்களை செலுத்துவதற்காக பாதீட்டினூடாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன், குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் நிகழ்ச்சித்திட்டமான 240-02-02 இன் கீழ் ரூபா 19,000 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், கட்டுநிதி கிடைக்காமையால் 2018 ஆம் ஆண்டின் யூலை 25 ஆந் திகதி வரையிலும் எந்தவிதமான வட்டி மானியமும் குறித்த வங்கிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 மற்றும் 2018 ஏப்ரல் 26 ஆகிய திகதிகளில் இவ்வாறு அரச மற்றும் அரசல்லாத வங்கிகளுக்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய வட்டி மானியங்களின் அளவுகள் பின்வருமாறு ஆகும்.

| | **2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான** | **2018 ஏப்ரல் 26 ஆந் திகதியில் உள்ளவாறான** |
|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| அரச வங்கிகள் | 13,564.49 | 15,223.51 |
| அரசல்லாத வங்கிகள் | 6,054.16 | 6,955.54 |
| | 19,618.65 | 22,179.05 |

## 2.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டு வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| வாகனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 |
| கணனி மற்றும் உப பாகங்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கம் |

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 26.122 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருடாந்த ஆளணி வேதன செலவினம் ரூபா 768,306 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 17 | 13 | 04 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 11 | 10 | 01 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 10 | 02 |
| | **மொத்தம்** | 41 | 34 | 07 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 17 சதவீதம் அல்லது 07 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமை நிறுவனத்தின் செயலாற்றலுக்கு பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளதா என தேடிக் கண்டறிந்து அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அவ்வாறானதொரு தாக்கமொன்று இல்லையாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கும் கவனம் செலுத்தப்படவில்லை எனபது அவதானிக்கப்பட்டது. அனைத்து வெற்றிடங்கள் தொடர்பிலும் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

**(ஆ) பதவியணியை பயிற்றுவித்தல்**

ஆண்டினுள் எவ்விதமான பயிற்சியையும் பெற்றிராத மற்றும் ஆகக் குறைந்தது 08 மணித்தியாலங்களேனும் பயிற்சியை பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 06 ஆகும்.